## முதலமைச்சர் ஜெயலலிதாவின் சொந்த தொகுதியான ஆர்.கே.நகரில் கூட மழைநீர் நிவாரணப் பணிகள் நடைபெறவில்லை - அதிமுக அரசின் அலட்சியத்தால் உணவு, உடை, வீடு ஆகிய அடிப்படை தேவைகளை இழந்து கொசு மற்றும் தொற்று நோய் பாதிப்பால் பொதுமக்கள் தவிக்கின்றனர் என பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்து உணவு மற்றும் உதவிகளை வழங்கிய திமுக பொருளாளர் தளபதி மு.க.ஸ்டாலின் குற்றச்சாட்டு

சென்னை மாநகரின் பல்வேறு பகுதிகளில் மழைநீரால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை திமுக பொருளாளர் தளபதி மு.க.ஸ்டாலின் பார்வையிட்டார். இன்று காலை 8 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை தொடர்ந்து கொளத்தூர், எழும்பூர், ஆர்.கே.நகர் உள்ளிட்ட பல பகுதிகளுக்கு சென்று மழைநீரால் பாதிக்கப்பட்ட பொதுமக்களை நேரில் சந்தித்த தளபதி மு.க.ஸ்டாலின், அவர்கள் தெரிவித்த குறைகளை கேட்டறிந்தார்.

எழும்பூர் டோபிகானா பகுதியில் ஏற்பட்டுள்ள மழைநீர் பாதிப்புகளை பார்வையிட்ட தளபதி மு.க.ஸ்டாலின் பாதிக்கப்பட்ட 200க்கும் மேற்பட்டோருக்கு 10 கிலோ அரிசியும், பிரட் மற்றும் பால் பாக்கெட்டுகளையும் வழங்கினார். பிறகு தனது சொந்த தொகுதியான கொளத்தூர் தொகுதிக்குட்பட்ட ராகவேந்திரா கோயில், சாந்தி நகர், ஸ்டேட் பேங்க் காலனி, அம்பேத்கார் நகர், சபாபதி தெரு, ஆண்டியப்பன் தெரு, தீட்டி தோட்டம், ஜானகிராமன் நகர், கென்னடி சதுக்கம், திருவள்ளுவர் தெரு, காமராஜர் தெரு, ஜெய்பீம் நகர், ஒத்தவாடை தெரு, சாமுண்டீஸ்வரி நகர், கோபாலபுரம், காமராஜர் நகர், பெரியார் நகர், மற்றும் கொளத்தூர் தொகுதி மேற்கு பகுதிக்கு உட்பட்ட சத்தியவாணி முத்து தெரு, வசந்தம் நகர், பூம்புகார்

நகர், நீலமேகம் தெரு, சிவசக்தி நகர் விரிவு, காந்தி நகர், அம்பேத்கார் நகர், ரெட்டேரி மீன் மார்க்கெட், யுனைடட் காலனி, சுந்தரம் நகர், திருப்பதி நகர், பாலாஜி நகர், அண்ணா சிலை உள்ளிட்ட 20வதிற்கும் மேற்பட்ட பகுதிகளுக்கு சென்ற தளபதி மு.க.ஸ்டாலின் நிவாரணப் பணிகளை முடுக்கி விட்டு, அந்த பகுதிகளில் மழையால் பாதிக்கப்பட்ட 6000க்கும் மேற்பட்ட பொது மக்களுக்கு பிரட் மற்றும் பால் பாக்கெட்டுகளை வழங்கினார்.

அப்போது தளபதி மு.க.ஸ்டாலினிடம் தங்கள் குறைகளை எடுத்துரைத்த பொதுமக்கள் தமிழக அரசும், சென்னை மாநகராட்சியும் போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காமல் அலட்சியமாக இருந்ததால், தங்கள் குடியிருப்புகள் பாழடைந்துள்ளதாகவும், நிவாரணப் பணிகள் ஆமை வேகத்தில் மந்தமாக நடைபெறுவதாகவும் வேதனை தெரிவித்தனர். மழைநீருடன் கழிவுநீரும் கலந்து வீடுகளுக்குள் புகுந்து தேங்கி நிற்பதால் குடும்பத்தோடு தெருவிற்கு வந்து அவதிபடுவதாக தெரிவித்த பொதுமக்கள், தற்காலிகமாக தங்குவதற்கு போதிய முகாம்களையும் இந்த அரசு ஏற்பாடு செய்யவில்லை என்றும் குற்றம் சாட்டினர். மேலும் உணவு, உடை, குடியிருப்பு ஆகிய அடிப்படை தேவைகளை முழுவதுமாக இழந்து, குடிக்க குடிநீர் கூட இல்லாமல் தவிப்பதாகவும், கழிவுநீரால் பலவித தொற்று நோய் பாதிப்பு ஏற்பட்டுள்ளதோடு கொசுத் தொல்லையாலும் பாதிக்கப்பட்டு இருப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர். இதனையடுத்து காந்தி நகர் முதல் பெரியார் நகர் வரை இருசக்கர வாகனத்தில் பயணித்த தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் மழை வெள்ளத்தால் சாலைகள் பல இடங்களில் உடைந்து குண்டும் குழியுமாக இருப்பதை பார்வையிட்டார்.

அதனை தொடர்ந்து முதலமைச்சர் ஜெயலலிதாவின் தொகுதியான ஆர்.கே.நகர் தொகுதிக்குட்பட்ட ஜெ.ஜெ.நகர், சத்தியமூர்த்தி நகர், மீனாம்பிகை நகர் ஆகிய பகுதிகளுக்கு சென்று அப்பகுதிகளில் ஏற்பட்டுள்ள மழைநீர் பாதிப்புகளை பார்வையிட்ட தளபதி மு.க.ஸ்டாலின் பாதிக்கப்பட்ட 1000த்திற்கும் மேற்பட்ட மக்களுக்கு அரிசி உட்பட பல பொருட்களை வழங்கிய பின் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார்.

அப்பேட்டியில், "இப்பகுதியில் நாங்கள் சந்தித்த பொதுமக்கள், கடந்த ஒரு வாரகாலமாக நாங்கள் அனைவரும் தண்ணீரிலேயே மூழ்கியிருக்கிறோம். மின்சாரம் இல்லை, கழிப்பிட வசதியில்லை, சாப்பிடுவதற்கு உணவு இல்லை, இரவு தூங்க முடியவில்லை, வியாதிகள் வந்து கொண்டிருக்கிறது, ஆனால் எதைப் பற்றியும் இந்த அரசு கவலைப்படவில்லை என்பதை மிகுந்த

வேதனையோடும், கோபத்தோடும், ஆத்திரத்தோடும் எங்களிடத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

கொளத்தூரில் என்னுடைய எம்.எல்.ஏ. நிதியை முழுமையாக பயன்படுத்தியிருந்தால் நிச்சயமாக என்னுடைய தொகுதி மழையிலிருந்து காப்பற்றப்பட்டிருக்கும். மழை நீர் பிரச்சனைக்காக பல திட்டங்களை தீட்டி அதற்காக என்னுடைய சட்டமன்ற உறுப்பினருக்கான மேம்பாட்டு நிதியை ஒதுக்கி இருந்தேன் அதை இந்த அரசு இது வரையிலும் முறையாக பயன்படுத்தவில்லை. அதனால் தான் இப்போது பல இடங்கள் கொளத்தூர் தொகுதியில் தண்ணீர் மூழ்கிக் கொண்டிருக்கிறது. நான் எம்.எல்.ஏ.வான பிறகு தொகுதியில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தர வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து, பலமுறை என்னுடைய கண்டனத்தை எழுப்பி அறிக்கை மூலம் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறேன். ஆனால் இந்த ஆட்சி மாறிய பிறகு தான் அடிப்படைப் பிரச்சனைகள் தீர்க்கப்பட போர்க்கால நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற எண்ணத்தோடு எனது தொகுதி மக்கள் எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

முதலமைச்சர் ஜெயலலிதா சென்னையில் தான் இப்போது தங்கியிருக்கிறார். கோடநாட்டிலோ, சிறுதாவூரிலோ ஓய்வெடுத்து கொண்டு கூட இருக்கவில்லை. போயஸ் கார்டனில் தான் தங்கியிருக்கிறார். அவரது தொகுதியான ஆர்.கே.நகருக்கு கூட வந்து மழைநீர் பாதிப்புகளை பார்க்கவில்லை. எல்லா எதிர்கட்சித் தலைவர்களும் மழைநீர் பாதிப்புகளை முதல்வர் நேரில் பார்வையிட்டு நிவாரணப் பணிகளை முடுக்கி விட வேண்டும் என்ற கோரிக்கையை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ஜெயலலிதா இதுவரை அதை செய்யவில்லை. இதிலிருந்து முதலமைச்சருக்கு மக்கள் மீது எவ்வளவு அக்கறை இருக்கிறது என்பது தெளிவாக தெரிகிறது.

முதலமைச்சர் தொகுதியான ஆர்.கே.நகர் தொகுதியிலே பல வீடுகளில் மிக மோசமான நிலையிலே இன்னும் தண்ணீர் தேங்கியுள்ளது. நிவாரண நடவடிக்கையில் இந்த அரசும், மாநகராட்சியும் சரியாக ஈடுபடவில்லை என்பது தெளிவாக தெரிகிறது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மழைநீர் வடிகால் கால்வாய்களை ஒழுங்காக தூர்வாரியிருந்தால் இந்தப் பிரச்சனையே வந்திருக்காது.

நான் மேயராக, இருந்த போதும் திராவிட முன்னேற்ற கழகம் ஆட்சி பொறுப்பிலிருந்த போதும், மா.சுப்ரமணியம் மேயராக இருந்த போதும்

மழைக் காலம் வருவதற்கு முன்பே மழைநீர் வடிகால் நிலைகளை தூர் வாரும் பணியை முறையாக செய்தோம். அப்படி செய்த காரணத்தினால் தான் அப்போது மழையிலிருந்து சென்னை மாநகரம் தப்பியது. ஆனால் இப்போது எதைப் பற்றியும் இந்த ஆட்சி கவலைப்படவில்லை. குறிப்பாக அண்மையில் ஜெயலலிதா இந்த ஆர்.கே.நகர் தொகுதியில் இடைத்தேர்தலில் நின்ற போது அவர் எப்படி வெற்றிப் பெற்றார் என்பது மக்களுக்கு தெரியும். அப்படி வெற்றி பெற்று இன்றைக்கு முதலமைச்சராக பொறுப்பிலிருக்க கூடியவர் இதுவரைக்கும் இங்கு என்ன நடக்கிறது என நேரடியாக வந்து பார்ப்பதற்கு அக்கறையில்லாத ஒரு முதலமைச்சரை இன்றைக்கு நாம் பார்க்கிறோம். ஆகவே செயல்படாத இந்த மாநகராட்சிக்கும் இந்த அரசுக்கும் திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் என்னுடைய கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன்'' என்றார்.

அப்போது சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு, வடக்கு மாவட்ட கழக செயலாளர் எஸ்.சுதர்சனம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ரங்கநாதன், கழக சட்டத்துறை செயலாளர் கிரிராஜன், பகுதி செயலாளர்கள் நாகராஜன், முரளி, சென்னை மாநகர கவுன்சிலர் தேவஜவகர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

***